



Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tenkasi
Date:2025.08.28 16:41:52

அளவர்/உதவி வரைவாளர் | வரைவாளர் நிலை-III | மேற்பார்வையாளர்

# மனைப்பிரிவு வரைபடம்

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தென்காசி மாவட்டம்
(திட்டமில்லா பகுதி)
ஆலங்குளம் வட்டம்
ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம்
புதுப்பட்டி ஊராட்சி
புதுப்பட்டி பகுதி -I கிராமம்

வ

சர்வே எண்: **606/4B, 607/1B, 607/2A, 608/4B, 608/5A, 608/6A, 609/1A, 609/2A**-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்பம் எண்: **LRDPPUOY/2025/TCP** | அளவு - **1: 800**

குறிப்பு:-

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | - | **40020.00** ச.மீ (**9.89** ஏக்கர்) |
| உத்தேச சாலையின் பரப்பு | - | **13606.34** ச.மீ |
| மீதமுள்ள பரப்பு | - | **26413.66** ச.மீ |
| குறைந்த வருவாய் பிரிவினர் வீட்டுமனைகள் பரப்பு | - | **2725.48** ச.மீ **(10.32%)** |

| | | |
|---|---|---|
| சாதாரண மனைகள் | - | **137** மனைகள் |
| **EWS** மனைகள் **(80-124)** | - | **45** மனைகள் |
| கோரிய மனைகள் | - | **182** |
| ஒதுக்கிய மனைகள் | - | **182** |

மனைப்பிரிவு இடத்தின் எல்லை
நிலையில் உள்ள சாலை
உத்தேச மனைப்பிரிவு சாலை
நிலையில் உள்ள கட்டிடம்

பொது ஒதுக்கீடுகள்:-

தான பத்திரம் எண்: 5452 நாள்: 14.08.2025 மூலம் உள்ளாட்சி மற்றும் **TANGEDCO**க்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகள்:

1. உத்தேச மனைப்பிரிவு சாலை (ம) மூலை முடக்கு பரப்பு - **13606.34** ச.மீ
2. பூங்கா பரப்பு - **2697.90** ச.மீ **(10.21%)**
3. பொது உபயோகம் Ⓐ **(PUBLIC PURPOSE)** ஒதுக்கீடு - **145.20** ச.மீ **(0.55%)**
4. பொது உபயோகம் Ⓑ **(TANGEDCO)** ஒதுக்கீடு - **143.75** ச.மீ **(0.54%)**

மூலை முடக்கு - 7.20மீ, 9.00மீ, 10.00மீ மற்றும் 12.00மீ அகல சாலைக்கு 1.50மீx1.50மீ

நிபந்தனைகள்:-

1. அரசாணை நிலை எண்: 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் :16.8.2003 மற்றும் அரசாணை நிலை எண் :181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 9.12.2020 -ன் படி உள்ளாட்சியால் நில உரிமம் குறித்து புதுப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் சாலைகள், மூலை முடக்கு மற்றும் இதர பொது உபயோகம் தான பத்திரம் மூலம் மனுதாரரால் புதுப்பட்டி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதியினை, ஊராட்சி பெயரில் உட்பிரிவு செய்யப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும், புதுப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்துசெய்யப்படும்.

4. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6 x 4 என்ற அளவிளான நிரந்தர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஓடை கால்வாய் போன்ற பொது நீர்வழி பாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும் அரசு புறம்போக்கு நிலங்களில் மேற்படி மனைப்பிரிவு அமையவில்லை என்பதையும் புதுப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள் உறுதி செய்து இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. இம்மனைப்பிரிவில் அமையும் குறைந்த வருவாய் பிரிவினருக்கான **(EWS)** மனை எண்: 80 முதல் 124, வரை, உள்ள மனைகளை மனை உட்பிரிவு (ம) மனை ஒருங்கிணைப்பு செய்தல் கூடாது.

ம.வ / தெமாநஊஅ (**SWP**)எண் - **51 / 2025**

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்